செ. கு. எண்: 100 நாள் : 09.10.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.10.2015

கடலூர் மாவட்டம், காரணப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலமுருகன் என்பவரின் மகள் செல்வி பாலஸ்ரீ 2.6.2015 அன்று காரணப்பட்டு அங்கன்வாடி அருகே பாம்பு கடித்ததில் மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், ஆசனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தாண்டவமூர்த்தி என்பவரின் மகன் குணசேகரன் 18.6.2015 அன்று வயல்வெளியில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த போது பாம்பு கடிதத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாம்பு கடித்து உயிரிழந்த பாலஸ்ரீ மற்றும் குணசேகரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**